1971 ஜூலை 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) செவிலியர் பணியாளரின் பெயர் 'செவிலியர் உதவி யாளர், என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்குரிய உத்திரவு 13—5—1971 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண். 1253-ல் பிறப்பிக் கப்பட்டுள்ளது.

(உ) அதுபோன்று வேறு பெயர் மாற்றம் இல்லை.

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நர்ஸிங் ஆர்டர்லி என்று சொல்லப்படுகிறவர்களுக்கு என்று குறிப்பிட்ட வேலை நேரக் கட்டுப்பாடு இருக்கிறதா ? பொது விடுமுறை நாட்கள் அவர்களுக்கும் அனுமதிக்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது அவர்களுடைய பெயர் மாற்றத்தைப்பற்றியது, வேலை நேரத்தைப் பற்றியதல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : நர்ஸிங் அஸிஸ்டெண்ட்ஸ் சமீபத் திலே மதுரையிலே கூடி தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி, தாங்கள் நான்காவது தரச் சிப்பந்திகளாக நடத்தப்படுவதாக முறையீடு கொடுத்திருக்கிறார்களே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த செவிலியர் உதவியாளர்கள் சங்க மாநாட்டில், அவர்கள் நான்காம் தர கடைநிலையில் இருக்கக்கூடாது, சுபிரியர் சர்வீஸ் என்ற வகை யிலே சேர்க்கப்படவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப் பொழுது அவர்கள் 60 வயதிலே ஓய்வுபெறமுடியும் என்று சொன்னால், இவ்வாறு வேறு நிலை அவர்கள் கேட்கின்றபொழுது 55 வயதிலே ஓய்வுபெறவேண்டும், அதை அவர்கள் ஏற்றுக்கொள் கிறார்களா என்று கேட்டறியப்பட்டிருக்கிறது. அதற்குமேல் அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

Graduate Nurses

* 344 Q. Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) the number of persons who graduated from the College of Nursing from its inception in 1967 till March, 1971;

(*b*) whether any scheme has been evolved to fully utilise their services; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 19.

(இ) & (உ) அவர்களின் பணி இப்பொழுதே முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.

[1971 ஜூலை 21

Dr. H. V. HANDE : Sir, we spend a lot of amount under this Section for training graduate nurses. Having spent that amount, there is a feeling among the graduate nurses that their services are not fully utilised. May I know from the Hon. Minister whether he has got any detailed programme–here afterwards we will get more graduates–chalked out, whether it is envisaged to see that the full knowledge that was given to them during training is properly utilised and higher qualified work is given to the qualified nurses. May I know all the details?

The Hon. Thiru K. ANBAZHAGAN : The training is given with a purpose to get them into particular services in the Medical Department and especially the services of the public health nurses, the nurses who are graduated under the subject public health are used in the teaching programme, both in the college, school of nursing and public health field. Nurses specialised with medical and surgical nursing are posted to the hospitals to work with the specialised doctors in Medicine and Surgery and their services are fully utilised for the improvement of the nursing course in the medical college hospitals. Generally, there is some difficulty in giving jobs to the nurses generally trained, but there is no difficulty found for these specialised trained nurses.

Thirumathi JOTHI VENCATACHELLUM : Sir, may I know how many of these graduate nurses are being sent abroad for specialised training?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஸ்பெஷலைஸ்டு டிரெயினிங், வெளிநாட்டுக்கு அனுப்புகிற திட்டம் பற்றியது அல்ல. இங்கேயே பட்டதாரி வகுப்புகளிலே பயிற்சி பெறுவதற்காக 19 பேர்கள் எடுக்கப்பட்டார்கள். இப்பொழுது அந்த 19 பேர்களும் பணியில் இருக்கிருர்கள் என்ற அளவுக்குத் தான் என்னிடத்திலே இப்பொழுது விவரம் இருக்கிறது.

கோவை அரசு மருத்துவமனையில் பயிற்சிப் பெற்ற செவிலியர்கள்

** 345 வினு—திரு. என். மருதாசலம் :* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் மருத்துவமனையில் 1967 முதல் 1971 மார்ச் முடிய செவிலியர் (Nurse) பயிற்சி பெற்றுத் தேறியவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு அரசு பணி கொடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 241 செவிலியர் மாணவியர் பொது செவிலியர் (General Nursing) பயிற்சி பெற்றுத் தேறினர்கள்.